நாங்குநேரி சம்பவம் மாணவர்களிடம் கூட சாதிய நச்சு ஊடுருவலை காட்டுகிறது!

மாணவர்கள் மனதில் சமூக நல்லுறவை விதைப்பதை அனைவரும் கடமையாகக் கொள்வோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.12-

நாங்குநேரியில் நடந்த சம்பவம் நடுக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும், இளம் மாணவர்களிடம் கூட சாதிய நச்சு ஊடுருவி இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது என்று குறிப்பிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் மனதில் சமூக நல்லுறவை விதைப்பதை அனைவரும் கடமையாகக் கொள்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

நாங்குநேரியில் நடந்த சம்பவம் நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. இளம் மாணவர்களிடம் கூட சாதிய நச்சு எந்தளவுக்கு ஊடுருவி இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. சக மனிதரை நமக்குச் சமமான ஒருவராக அடையாளம் காணாமல் சாதி வேறுபாடும் மாறுபாடும் பார்த்து வெறுப்பதும், அத்தகைய வெறுப்பை வன்முறையாக வெளிப்படுத்துவதும் இன்னும் தொடர்வது சகிக்க முடியாததாக இருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் கொடூரமாகத் தாக்கப்பட்ட மாணவர்களின் மருத்துவம் மற்றும் கல்விச் செலவை ஏற்க இருப்பதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவித்திருக்கிறார். குற்றச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். சட்டம் அதன் கடமையைச் சரியாகச் செய்யும்.

அதே நேரத்தில் மாணவர்கள் மனதில் சமூக நல்லுறவை விதைப்பதை அனைவரும் கடமையாகக் கொள்வோம். குறிப்பாக ஆசிரியர் சமூகமானது, இது போன்ற நன்னெறிகளை ஊட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். வெறுப்பு மனம் கொண்டவர்களால் எந்த வெற்றியையும் அடைய முடியாது. பேசும் மொழியால் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்! நமக்குள் வெறுப்புணர்வும் ஏற்றத் தாழ்வு எண்ணமும் கூடாது என்பதை இளைய சமுதாயம் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு வராதவரை வரவழைத்துப் பேசாதவரைப் பேச வைத்தது

எதிர்க்கட்சிகளின் ஜனநாயக முயற்சிக்கு கிடைத்த வெற்றி!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.12-

நாடாளுமன்றத்திற்கு வராதவரை வரவழைத்துப் பேசாதவரைப் பேச வைத்தது எதிர்க்கட்சிகளின் ஜனநாயக முயற்சிக்கு வெற்றி. ஆட்சிக்கு வரும்முன் மோடி அள்ளி வீசிய வாக்குறுதிகளின் இன்றைய நிலை என்ன? என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

நாடாளுமன்றத்தில் தற்போதுள்ள எதிர்க்கட்சியினர் பிரதமர் மோடி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசுமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தனர்.

கடந்த 10 நாள்களுக்கும் மேலாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டத் தொடர்கள் நடந்து வருகின்றன என்றாலும், மணிப்பூர் பிரச்சினை தொடர்பாக பிரதமர் வந்து பதில் அளிக்காதால், நாடாளுமன்றத்தில் தொடர் அமளி.

மணிப்பூர் மாநிலம் கடந்த 3 மாதங்களுக்கு மேல் பற்றி எரிகிறது; சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, தீ வைப்பு, கொலை, கொள்ளை மற்றும் இராணுவ முகாம்களிலிருந்து, காவல் நிலையங்களிலிருந்து துப்பாக்கிகள் எடுத்துச் செல்லப்பட்டு, கலகக்காரர்கள் நடத்துகின்ற கலவரம் துப்பாக்கிச் சூடுகள் தொடரும் வேதனையான அவலம்; இத்தகைய கொடுமைகளுக்கு உச்சமாக 3 பெண்கள் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கூட்டுப் பாலியல் வன்புணர்ச்சிக்குப் பலியாகி, அவர்களை நிர்வாணமாக்கிய கொடுமை கண்டு நாட்டின் நல்லவர்கள் ரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

காவல்துறை சரியாக இயங்கவில்லை; முறையாக வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை பதிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளில் முதல் தகவல் அறிக்கைகளின் நிலை என்ன? என்று உச்சநீதிமன்றம் தாமாகவே முன்வந்து வழக்குப் பதிவு செய்து, மணிப்பூர் கொடூரங்களுக்கு நீதி வழங்க மனிதாபிமான பச்சாதாபத்துடன் கடமையாற்றிவரும் நிலையிலும், பிரதமர் மோடி அவர்கள், மணிப்பூருக்குச் சென்று நேரில் அம்மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, ஆற்றுப்படுத்தவில்லை.

நாடாளுமன்றத்திற்குப் பிரதமர் வந்து, இதுபற்றிய மக்கள் எதிர்க்கட்சிகளின் கவலையை, அச்சத்தைப் போக்கி, நிலைமைகளுக்கு உத்தரவாதம் தருவது தானே நியாயம்?

அவர் தொடர்ந்து வராது இருந்த நிலையில், அவரது மவுனத்தைக் கலைத்து, அவரை நாடாளுமன்ற அவைக்கு வரவழைக்கும் ஓர் உத்தியாகவே ஏற்பாடாகவே அவரது ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்ற ஒன்றினை ஒரு வேலைத் திட்டம்போல் செய்தனர்.

வராதவரை, வர வைத்தனர்!

பா.ஜ.க.விற்கு ஆளும் கட்சிக்கு உள்ள 'புல்டோசர்' மெஜாரிட்டி எண்ணிக்கை காரணமாக அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோற்கும் என்பதைத் தெரிந்தே இதைக் கொண்டு வந்தனர்!

"அவைக்கு என்னை வர வழைக்கவே இத்தீர்மானம்" என்று தனது பதிலுரையில் பிரதமரே ஒப்புக்கொண்டார்.

இதில் யாருக்கு வெற்றி எதிர்க்கட்சி அணியினருக்கா? ஆளுங்கட்சியினருக்கா? என்றால், எண்ணிக்கை பலன் கணக்குப்படி ஆளுங்கட்சிக்கு இது வெற்றி! ஆனால், ஜனநாயகத்திற்குப் புத்துயிர் தரும் முயற்சியைப் பொறுத்தவரை மேற்கொண்டவர்களுக்கு இது ஒரு கொள்கை வெற்றி!

மணிப்பூர் பற்றி பிரதமர் மோடி, அதிக நேரம் விரிவாகப் பேசி, விளக்கம் தந்து, அங்குள்ள மக்களுக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் ஏதும் கூறாது, பொத்தாம் பொதுவில் கூறிய சம்பிரதாய பதிலாகத்தான் அவரது விளக்கம் இருந்தது நாட்டு மக்களுக்குப் பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது!

தனது இரண்டரை மணிநேர உரையில் பெரிதும் காங்கிரசையும், தி.மு.க.வையும்பற்றியே, பிரதமர் குற்றஞ்சாட்டிப் பேசினார்.

பல பிரச்சினைகளுக்குக் காங்கிரஸ்தான் காரணம் என்று அடுக்கினார்!

அதற்கு ஒரே பதில் நியாயமான கேள்விமூலம் கிடைக்குமே!

அதனால்தானே அவர் களை மக்கள் மாற்றி விட்டு, உங்களது 'சப்கா சாத் சப்கா விகாஸ்; சப்கா விஸ்வாஸ்' இவற்றையெல்லாம் நம்பி தேர்தல்மூலம் உங்களைத் தானே ஆட்சியில் அமர வைத்தார்கள்!

கொடுத்த வாக்குறுதிகள் என்ன ஆனது?

2014-இல் தேர்தலின் போது பேசிய நீங்கள் (நரேந்திர மோடி) "60 ஆண்டுகளில் காங்கிரஸ் செய்யாததை, செய்யத் தவறியதை நான் ஆறே ஆண்டுகளில் செய்து சரிப்படுத்துவேன்" என்று தேர்தல் மேடைகளில் முழங்கி, ஒருமுறை அல்ல; இரண்டு முறை இடங்கள் அடிப்படையில் பெருத்த மெஜாரிட்டி பெற்றும் (37 சதவிகித வாக்குகள்தான் என்பது ஒருபுறம் இருந்தபோதிலும் கூட) ஏன் செய்யவில்லை கொடுத்த வாக்குறுதிகள் ஏன் நிறைவேற்றப்படவில்லை? வேலை வாய்ப்பு வழங்கப்படும், விலைவாசி ஏற்றம் குறையும், விவசாயிகளுக்கு வருமானம் இரட்டிப்புப் மடங்கு பெருகும்; குறைந்தபட்ச விளைபொருள் விலை நிர்ணயம் (MSP); தமிழ்நாட்டு மீனவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு ஆகியவை என்னாயிற்று? பிரதமராக இருப்பதால், கச்சத்தீவை மீட்குமாறு உங்களைத் தானே கேட்க முடியும்? முதலமைச்சர்கள் நேரடியாக செயல்பட முடியாதே.

"காங்கிரஸ் செய்ததா? காங்கிரஸ் காலத்தில் சரிப்படுத்தப்படவில்லை" என்று குற்றம் சுமத்தினாரே!

ஒரு கேள்வி, இடையில் உங்களுக்குமுன் வாஜ்பேயி தலைமையில் பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியில் இருந்தபோது, அந்த பா.ஜ.க. அரசு காலத்தில் மீனவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்புத் தர முடிந்ததா? காங்கிரசை வீழ்த்திட்டபோதுகூட ஏன் செய்யத் தவறினீர்கள்?

உங்களது 9 ஆண்டுகால ஆட்சியில், ஆட்சிக்கு வரும்முன்பு மீனவர்களுக்கு நீங்கள் ஊட்டிய நம்பிக்கை நிறைவேற்றப்படவில்லையே என்றுதான் தமிழ்நாடு முதலமைச்சர், பிரதமர் என்ற முறையில் உங்களுக்குக் கடிதம் எழுதி கோரிக்கை வைக்கிறார்? அதுதானே அரசமைப்புச் சட்ட முறை.

தமிழ்நாடு மீதும், தி.மு.க.மீதும் குற்றம் சுமத்தி பிரதமரும், சில அமைச்சர்களும் பேசுவது பற்றியும், வாரிசு அரசியல் பற்றியும் எங்கெங்கெல்லாம் காங்கிரஸ் எதிர்க்கட்சி இல்லை என்பதுபோல், எங்கெங்கெல்லாம் பா.ஜ.க. ஆட்சி மாநிலங்களில் இல்லை என்பதைப்பற்றியும் நாளை விளக்குவோம்.

கருநாடக மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு மக்கள் விடை கொடுத்ததற்கு, அதன் "40 சதவிகித ஊழல்" என்ற காரணமும் முக்கியம் என்பதை வசதியாக மறக்கலாமா?

உங்கள் மவுனம் கலைந்தது. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஒரு முக்கிய அம்சம்.

விவாதம் வெற்றிகரமாக நடந்தது என்பதால் எதிர்க்கட்சியினருக்கு இது ஒரு கொள்கை வெற்றியாகும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிலம்புச் செல்வரின் போராட்டத்தை ஏற்பாரா அம்மணி?

என் இனிய தமிழ் சொந்தங்களே.....

நீங்கள் கண்டும் காணாமல் இருப்பதனால் நாடாளுமன்றத்தில் ஏதேதோ நடக்கிறது. ஏதேதோ பேசப்படுகிறது. சாகச சித்தர்கள் மூவர் நாடாளுமன்றத்திலே வார்த்தை நர்த்தனம் செய்பவர்கள் அவர்கள். அதிலும் அந்த அம்மணி சிலம்புச் செல்வர் மா.பொ.சியை துணைக்கு அழைக்கிறார். ஐயா எழுதியதை சிலப்பதிகாரத்தில் இருக்கிறது என்கிறார். ஒப்புக் கொள்வதாகவே வைத்துக் கொள்வோம் . ஆரியரும் தமிழரே என் ம.பொ.சி. எழுதியதாகச் சொல்கிறார். திராவிடம் என ஒன்று இல்லை தமிழகமே இருந்தது என்கிறார்.

அத்தோடு நிறுத்தாமல் ம.பொ.சி.யின் எழுத்துக்களை நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நின்று கொண்டுதமிழில் படித்து காட்டுகிறார். பிற மாநிலத்துக்காரர்கள் வேண்டுமானால் ஏமாந்து விடலாம். திராவிடத் தமிழர்களுக்கு வரலாறு தெரியும். பெரியார், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர் ஆகியோர் வரலாற்றை விளக்கமாக மக்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

சிலம்புச் செல்வரின் காலத்துக்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே சர் ஜான் மார்ஷல்என்ற ஆராய்ச்சியாளர் திராவிட பண்புகளை ஆராய்ந்து அறிந்து கூறியதாவது:- பண்டைத் தமிழரின் வாழ்வு பாடுபட்டதும், வீரம் சரிந்ததும், கலை கறையானதும், நிலை குலைந்ததும் ஆரியரின் வரவின் பின்னால்தான் என்று தன் ஆராய்ச்சியின் முடிவில் எழுதியது மட்டுமல்லாமல் ஆரியமே திராவிட நாகரிகத்தை பாழ்படுத்தியது என்றும் சொல்கிறார்.

மறுப்பாரா ஆரிய அம்மணி? ஜான் மார்ஷல் அவர்களுக்கு பின்னால் பல ஆராய்ச்சியாளர்கள் திராவிட நாகரிகம் பாழானதுக்கு ஆரிய வரவே காரணமாயிற்று என சான்றுகளோடு எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். அதையெல்லாம் விட்டு விட்டு அம்மையார் ம.பொ.சி.யை கையில் எடுக்கிறார். ஏழுமலையானின் வாசஸ்தலம் ஆனதிருப்பதி கோவில் முருகன் கோவில். ஆகவே அது தமிழ்நாட்டுக்கே சொந்தம் என்று போராடியவர் சிலம்புச் செல்வர். மற்ற விஷயங்களுக்கு அவரை சாட்சிக்கு எழுதும் ஐயங்கார் அம்மையார் சிலம்புச் செல்வரின் இந்தப் போராட்டத்தையும் ஏற்றுக் கொள்வாரா? திருத்தணியை வென்றெடுத்து வெற்றி வாகை சூடிய சிலம்புச் செல்வர் தனித் தமிழ்நாடு எண்ணம் கொண்டவர் என்பதை அம்மையார் ஏற்றுக் கொள்வாரா?

நாடாளுமன்றத்தில் இன்னுமொரு விஷயத்தை அம்மையார் சொல்லுகிறார். ஜெயலலிதா அவர்களை சட்டசபையிலே அன்றைய ஆட்சியாளர்கள் அவமானப்படுத்தினார்கள் என்று குற்றம் சாட்டுகிறார். நான் அதற்குள் போக விரும்பவில்லை. ஆனால் தன் தோழிக்கு ஏற்பட்ட அவமானத்தைச் சொல்லுகின்ற அமைச்சர், ஜெயலலிதா அவர்களின் மருத்துவமனை மரணத்திற்கு காரணம் யார் என்பதையும் தெரிந்து வைத்திருப்பார்களே? அதையும் நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொல்லி இருக்கலாமே?

மூன்று சதவீதத்தினருக்கு ஒன்றிய அரசில் மூன்று முக்கிய அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தர்மம் நியாயங்களைப் பற்றி பேசுகின்ற அம்மையார் முதலில் இது நியாயமா? ஜனநாயகமா என்பதை சொல்லுவாரா? அப்படி என்றால் மீதி 97 சதவீதத்தை இவர்கள் ஆள்வது மக்களாட்சியாகுமா? இதுதான் அவர்களின் சமநீதியா?

கேட்பதற்கு இன்னும் ஏராளம் இருக்கின்றது. ஆனால் நமது தமிழர்கள் இன்னும் கொஞ்சம் விழிப்புணர்வு அடைய வேண்டும்.

வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அலுவலகத்தில்

கார்ல் மார்க்ஸ் அஞ்சல் தலை வெளியீட்டு விழா!

இரா. நல்லகண்ணு-தொல்.திருமாவளவன்- மு.சண்முகம் -முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஆக.12

மாமேதை கார்ல் மார்க்ஸ் அஞ்சல் தலை வெளியீட்டு விழா இன்று (12.08.23, சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் திடல், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி அலுவலகம், அசோக்நகரில் நடைபெறுகின்றது. நிகழ்ச்சிக்கு பேரா. அ. மார்க்ஸ் தலைமை வகிக்கிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி., இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன், அன்பு தனசேகரன், ஆசைத்தம்பி, பாஸ்கரன் மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

செல்வி தொகுத்து வழங்குகிறார். வ.ரமணி நன்றி கூறுகிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள்

பகுதி - வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (12/08/2023 - சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மகாலில் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கலைஞர் நூற்றாண்டு விழா, கழக ஆக்கப் பணிகள்

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

நடிகர் சத்யராஜ் தாயார்

நாதாம்பாள் காளிங்கராயர் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 12-

நடிகர் சத்யராஜ் அவர்களின் தாயார் நாதாம்பாள் காளிங்கராயர் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நடிகர் சத்யராஜ் அவர்களின் தாயார் நாதாம்பாள் காளிங்கராயர் அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று (11-08-2023) மாலை இயற்கை எய்தினார் என்று அறிந்து வருந்துகிறேன்.

அரவணைத்து ஆளாக்கிய அன்னையை இழந்து தவிக்கும் திரு. சத்யராஜ் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் எம்.ஆர்.ஆர்.வாசுவின் மனைவி -

நடிகர் வாசு விக்ரம் தாயார் திருமதி லலிதாம்மாள் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.12

நடிகர் எம்.ஆர்.ஆர்.வாசு அவர்களின் மனைவியும், நடிகர் வாசு விக்ரமின் தாயாருமான திருமதி லலிதாம்மாள் அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம். செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

நடிகர் எம்.ஆர்.ஆர். வாசு அவர்களின் மனைவியும், நடிகர் வாசு விக்ரம் அவர்களின் தாயாருமான திருமதி. லலிதாம்மாள் அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து வருத்தமடைந்தேன்.

அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



புதிதாக நியமிக்கப்பட்ட காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மீனவர் அணி நிர்வாகிகளான மாவட்ட அமைப்பாளர் ஆர்.கோவிந்தன், மாவட்டத் தலைவர் ஆர்.யாதவன், துணைத் தலைவர் எஸ்.கதிரவன், துணை அமைப்பாளர்கள் செல்வகுமார், சி.பஞ்சாமிர்தம், பி.சிவமணி, சி.கோபிநாத், இ.உதயகுமார், ஆகியோர் மீன் வளத்துறை அமைச்சர் ஆர்.அனிதா ராதாகிருஷ்ணனை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். திருப்போரூர் வடக்கு–தெற்கு ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், எம்.சேகர், சுகுமார், ஜி.கோகுல் ஆகியோர் உடனுள்ளனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருவாலங்காடு ஒன்றியம் புனிமாங்காடு ஊராட்சியில் கிளைக் கழக செயலாளர் மறைந்த குப்பன் அவர்களின் இல்லத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் மாவட்ட கவுன்சிலர் விஜயகுமாரி சரவணன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்.	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்.	மொத்தம்
1	மே.பொ/கொ&நி/வ.செ.அ.மி.நி-I	CE-101	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும், திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்கண்ட இணையதளங்களை காணவும். www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

"சோதனை கடந்த சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்". செ.ம.தொ.இ/4461/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், விழுப்புரம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.27/2023-2024/தவஅ/நாள்-09.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், **திட்டம் சாராப் பணிகள் 2023–24–ன் கீழ் விழுப்புரம், விருத்தாசலம் மற்றும் அரியலூர் (நெ) க(ம)ப கோட்டங்களில் முறையே (VPM-105–106, 107–108 & 109) ஐந்து** பணிகளுக்கு இணையவழியில் ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **08.09.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரங்கள், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **21.08.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4445/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், விழுப்புரம்

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/2613/2023

இரு உறை குறுகிய கால முறையில்
மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

வ. எண்	கோப்பு எண் மற்றும் பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பந்தற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம் - 12, கோட்டம் - 158ல் உள்ள கணபதிபுரம் காலனி 1வது தெரு, 4வது தெரு, உட்கிரீக் கண்டரி 1வது பிரதான சாலை, 4வது குறுக்குத் தெரு, 2வது பிரதான சாலை மற்றும் 15வது குறுக்குத் தெருவில் 1500 x 1500 எம்.எம் அளவு மற்றும் அண்ணா பிரதான சாலையில் 900 x 900 எம்.எம் புதிய மழைநீர் வடிகால் கட்டும் பணி	ரூ. 635.03	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **22.08.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் **23.08.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4476 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்